தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
ஆணை எண். 26 /பேரூ/2021

நாள் 06.10.2021

திரு. M. செந்தில்குமார்,
வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சி, கதவு எண்.1/16/25A சோழன் தெரு, காந்தி நகர், வத்தலக்குண்டு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. செந்தில்குமார் என்பவரது **04.09.2020** நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் **9.9.2020**ல் பெறப்பட்டு **26/2021**என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சி, கதவு எண்.1/16/25A சோழன் தெரு, காந்தி நகர், வத்தலக்குண்டு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. செந்தில்குமார் என்பவர் வத்தலக்குண்டு பேரூராட்சிக்குட்பட்ட, காந்தி நகர், சோழன் தெருவில் சர்வே எண்.384/5A–ல் தமக்குச் சொந்தமான மனை (plot) உள்ளது என்றும், தமது மனைக்கு பக்கத்தில் சர்வே எண்.384/5B–ல் (New Survey No.1259/5B) வத்தலக்குண்டு பேரூராட்சிக்குச் சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ளதென்றும், இந்த மனை நில உரிமையாளரால் பொது நோக்கத்திற்காக வத்தலக்குண்டு பேரூராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். பேரூராட்சி நிர்வாகம் தன்வசம் பெற்று, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துள்ள மேற்படி மனையை நில ஆவணங்களின் அதாவது A பதிவேடு, அடங்கல் பதிவேடு, தாய் பத்திரம் (parent documents) போன்ற ஆவணங்களின் அடிப்படையில் நில அளவை செய்து இதுவரை அம்மனையின் எல்லைகளை நிர்ணயிக்காததால், பேரூராட்சிக்குச்

சொந்தமான மேற்படி மனையில் சட்டத்திற்குப் புறம்பான வகையில் சிலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும், சர்வே எண்.384/5A–ல் அமைந்துள்ள தமது மனைக்கும், சர்வே எண்.384/5B–ல் அமைந்துள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான மனைக்கும் இடையில் ஒரு பகுதியில் பாதை அமைக்க முயற்சிப்பதாகவும், இதனால் அருகே அமைந்துள்ள தனது மனையில் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்பவர்களால் அத்துமீறி நுழைவது அடிக்கடி நிகழ்வதும், தனது மனையில் உள்ள பூச்செடிகள் மற்றும் தாவரங்கள் அழிக்கப்படுவதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமல்லாது, தனது வயது முதிர்ந்த பெற்றோர்கள் தனியே வசித்து வரும் நிலையில் அவர்களுக்கு தாங்க இயலாத துன்பங்களும் கொடுமைகளும் நிகழ்கின்றன என்றும், இவற்றுக்கெல்லாம் காரணமாக பக்கத்தில் சர்வே எண்.384/5B–ல் (New S.No.1259/5B) அமைந்துள்ள வத்தலக்குண்டு பேரூராட்சிக்குச் சொந்தமான நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள மனையின் நான்கு எல்லைகளையும் நில ஆவணங்களின் அடிப்படையில் மீள அளந்து பேரூராட்சி உறுதிசெய்திடவும், அந்த மனையில் அத்துமீறி சட்டத்திற்கு புறம்பாக உள்நுழைந்து ஆக்கிரமிப்புகள் ஏதும் நிகழாதவாறு அதன் எல்லைகளை பேரூராட்சி உறுதி செய்திடுமாறும், அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனே அகற்றிடவும், சர்வே எண்.384/5A மற்றும் சர்வே எண்.384/5B ஆகியவற்றினிடையே அனுமதியில்லாமல் ஆக்கிரமிப்பாளர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள நடைபாதை இடத்தை முற்றிலும் தடுத்திடவும் உரிய விசாரணை மேற்கொண்டு, உரிய ஆணையினைப் பிறப்பிக்கக்கோரி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 8.9.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.8.2021 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேற்கண்ட இருவரும் 08.09.2021 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

முறையீட்டு மனுதாரர் திரு. M. செந்தில்குமார் 8.9.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "வத்தலக்குண்டு பேரூராட்சிக்கு உட்பட்ட காந்தி நகர் சோழன் தெருவில் பேரூராட்சிக்குச் சொந்தமான குடிநீர் விநியோக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அருகில் உள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான காலியிடத்தை அந்நிய நபர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் அங்கு வசிக்கும் மக்களுக்கு சிரமமாக உள்ளது. இதனை பேரூராட்சியில் எடுத்துரைத்தபோது, பேரூராட்சியும் மேற்கண்ட தொட்டி அமைந்துள்ள காலியிடத்தைச் சுற்றி வேலி அமைத்தனர். ஆனால், சிறிது காலத்திலேயே வேலி அகற்றப்பட்டு மீண்டும் அவ்விடத்தை அந்நிய நபர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனை தடுக்கும்பொருட்டு, வத்தலக்குண்டு பேரூராட்சிக்கு தகுந்த ஆணையினை பிறப்பிக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகலினை இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் முறையீட்டு மனுதாரர் அளித்துள்ள எழுத்துபூர்வமான கூடுதல் ஆவணத்தில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தினால் வழக்கு எண். SA.245/D/2020 நாள் 3.9.2020ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில், வத்தலக்குண்டு பேரூராட்சிக்குச் சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ள S.No.384/5B மனையினை அளந்து

மனையின் மூன்று பக்கங்களிலும் கம்பி வேலி (barbed wire fencing) பேரூராட்சியால் அமைக்கப்பட்டதாகவும், ஆனால் அதன் பின்னர் 17.7.2021 அன்று ஆக்கிரமிப்பாளர்களால் அக்கம்பிவேலி முற்றிலுமாக சீர்குலைக்கப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனவே, வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சியின் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள மனையின் எல்லைகளுக்கு உரிய போலீஸ் பாதுகாப்புடன் கம்பி வேலிக்கு மாற்றாக நிரந்தர காம்பவுண்டு சுவர் அமைத்து, அதில் அத்துமீறி ஆக்கிரமிப்பாளர்கள் நுழையாதவாறும், தேவையற்ற கிரிமினல் நடவடிக்கைகள் ஏதும் அங்கு நிகழாதவாறும், நில அபகரிப்பு ஏற்படாமல் தவிர்க்கும் வகையிலும் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், மாநில தகவல் ஆணையத்தின் ஆணையின் அடிப்படையில், அமைக்கப்பட்ட கம்பி வேலிக்கு சேதம் ஏற்படுத்தியதைத் தடுக்கத் தவறிய வத்தலக்குண்டு பேரூராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், தமது கடமையிலிருந்து வழுவிய அப்பணியாளர்களிடமிருந்து உரிய இழப்பீட்டினை வசூலிக்குமாறும் மனுதாரர் தமது கூடுதல் எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 8.9.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "வத்தலக்குண்டு பேரூராட்சி காந்திநகர் சோழன் தெருவில், பேரூராட்சிக்குச் சொந்தமான குடிநீர் தொட்டி அமைந்துள்ள இடத்தில் அந்நிய நபர்கள் நடமாட்டத்தைத் தடுக்கும் வகையில் மேற்கண்ட இடத்தைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது. ஆனால், ஒருசில நாட்களில் அடையாளம் தெரியாத நபர்களால் வேலி அகற்றப்பட்டது. தற்போது 3.9.2021 அன்று மேற்கண்ட இடத்தில் வேலி அமைக்கப்பட்டுவிட்டது. அது தொடர்பான புகைப்படங்களை இம்மன்றத்தின்முன் சமர்ப்பிக்கிறேன். மேலும், மேற்கண்ட இடத்தில் வேலியை அகற்றும் நபர்களை கண்டறிந்து சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறையில் ஏற்கனவே கடந்த ஜுலை மாதம் புகார் அளிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக பேரூராட்சியின் மூலம் மீண்டும் காவல்துறையில் புகார் அளிக்கப்படும் எனவும், மேலும் பேரூராட்சியின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மேற்கண்ட இடத்தில் காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், அவ்விடத்தில் காம்ப்பவுண்ட் சுவர் அமைத்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இம்மன்றத்தின்முன் உறுதியளிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 8.9.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின்போது வாக்குமூலத்துடன் அளித்துள்ள 6.9.2021 நாளிட்ட அறிக்கையில் வத்தலக்குண்டு பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் சோழன் தெருவில் பேரூராட்சிக்குச் சொந்தமான குடிநீர் விநியோக மேல்நிலைத்தொட்டிக்கு அருகில் உள்ள காலியிடம் வேறு நபர்களால் நடைபாதையாக பயன்படுத்தி வருவதை தடுக்கவேண்டி திரு. எம். செந்தில்குமார் என்பவரால் தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தில் தாக்கல்செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.SA.489D/2020–ல் 3.9.2020–ல் மாநில தகவல் ஆணையத்தினால் விசாரணை மேற்கொண்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில், புதிய சர்வே எண்.1259/5B மற்றும் பழைய சர்வே எண்.384/5B–ல் குடிநீர் விநியோக மேல்நிலைத்தொட்டிக்கு அருகில் உள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான காலியிடத்தை 24.9.2020–ல் வருவாய்த்துறை நில அளவையர் மூலம் அளந்து ஊர்ஜிதம் செய்து, குயியீடு செய்து வேறு எவரும் உள்ளே நுழையாதவாறு

முழுவதுமாக கம்பிவேலி அமைக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான புகைப்படம் மற்றும் நில அளவையரால் ஆக்கிரமிப்பு என குறியீடு செய்யப்பட்ட சிட்டா அடங்கலுடன் மனுதாரருக்கு பேரூராட்சி கடித ந.க.எண்.658/2019/அ1 நாள் 28.9.2020–ன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், மேற்படி கம்பிவேலியை 20.7.2021 அன்று அடையாளம் தெரியாத நபர்கள் சேதப்படுத்தியது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து பேரூராட்சி சொத்தை சேதப்படுத்திய நபர்களை கண்டறிந்து சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள காவல்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டு, மீண்டும் அதே இடத்தில் காவல்துறை பாதுகாப்புடன் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட சேதமடைந்த கம்பி வேலியினை சரிசெய்த புகைப்பட நகல்கள் மற்றும் உரிய கோப்பு நகல்களும் முறைமன்ற நடுவத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அவர் அளித்துள்ள கூடுதல் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள், வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. வத்தலக்குண்டு பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் சோழன் தெருவில் பேரூராட்சிக்குச் சொந்தமான குடிநீர்தொட்டி அமைந்துள்ள இடத்தில் அந்நிய நபர்கள் நடமாட்டத்தைத் தடுக்கும்வகையிலும், பொதுப்பாதையாக அந்த இடத்தை வேறு நபர்கள் பயன்படுத்துவதைத் தடுக்கவும் பேரூராட்சி நிர்வாகத்தினால் வருவாய்த் துறையின் உதவியோடு நிலத்தை அளந்து கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அமைக்கப்பட்ட கம்பி வேலியை சேதப்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஏற்கனவே காவல் துறையிடம் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சியால் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ள இடமான இருப்பதால் அது கண்டிப்பாக பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். எனவே, உரிய முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். எனவே, இதுகுறித்து பேரூராட்சி நிர்வாகம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கும் தெரிவிக்கவேண்டும். மேலும், பேரூராட்சியின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மேற்கண்ட இடத்தில் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், அவ்விடத்தில் சுற்றுச் சுவர் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதால், மனுதாரரது புகார் மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தீர்வு காணப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. எனவே, வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுதாரரின் இப்புகார் மனு மீதான மேல்நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், புகார்கள் குறித்து காவல்துறையை அவ்வப்போது தொடர்புகொண்டு ஆக்கிரமிப்புகள் இல்லாமலும், சேதாரமில்லாமலும் இடத்தைப் பாதுகாக்க பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2021ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 6–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. M. செந்தில்குமார்,
1/16/25A சோழன் தெரு,
காந்தி நகர், வத்தலக்குண்டு,
திண்டுக்கல் மாவட்டம்–624 202

செயல் அலுவலர், வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி,
வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம்–624 202

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்